நேற்று சில நிமிடங்களிலேயே, பாட்டில்கள் விற்ற நிலையில், காலி ஸ்டால்களில், 'ஷிப்ட்' முறையில், மூன்று பணியாளர்களும் மாறிக்கொண்டிருந்தனர். குறிப்பிட்ட அளவு கிடைக்கும் வரை, இதே நிலை தான் தொடரும்.

தண்ணி 'காட்டியாச்சு...'

மதுரை மாட்டுத்தாவணி பஸ்ஸ்டாண்டில், 'அம்மா மினரல் வாட்டர்' பாட்டில்கள், வந்த வேகத்தில் விற்று தீர்ந்ததால், பகல் 12.15 மணிக்கு வெறிச்சோடிய ஸ்டால்.

கேட்டதோ ஏழாயிரம்; வந்ததோ சில ஆயிரம்

முதல்நாளே 'தவிக்கவிட்ட' அம்மா மினரல் வாட்டர்

மதுரை, செப். 17 -

மதுரையில் நேற்று தொடங்கிய 'அம்மா மினரல் வாட்டர்' திட்டத்தில், எதிர்பார்த்த எண்ணிக்கையில் பாட்டில்கள் வராததால், முதல்நாளே, பயணிகள் ஏமாற்றம் அடைந்தனர்.

அரசு பஸ்களில், ரூ.10க்கு, 'அம்மா மினரல் வாட்டர்' வழங்கும் திட்டத்தை, முதல்வர் ஜெ., நேற்று முன்தினம் துவக்கி வைத்தார். நேற்று முதல் அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டது.

மதுரையில் நகர் மற்றும் புறநகர் பஸ் ஸ்டாண்டுகளில், போக்குவரத்து கழகம் சார்பில், அதற்கான ஸ்டால்கள் அமைக்கப்பட்டு, வினியோகம் தொடங்கியது. அரசு விரைவு போக்குவரத்து கழகம் சார்பில்(எஸ்.இ.டி.சி.,) மாட்டுத்தாவணியில் மற்றொரு ஸ்டாலும் அமைக்கப்பட்டிருந்தது.

எதிர்பார்த்தபடி, முதல் நாளில் குடிநீர் பாட்டில் வினியோகம் நடக்கவில்லை. இதனால், ஒவ்வொரு ஸ்டாலுக்கும் நூற்றுக்கும் குறைவான பாட்டில்களே, விற்பனைக்கு வந்தது. மாட்டுத்தாவணி பஸ் ஸ்டாண்ட் ஸ்டாலில், 84 குடிநீர் பாட்டில்களே விற்பனைக்கு வந்து, சில நிமிடங்களிலேயே விற்றது. ஆனால், அவர்கள் கேட்டிருந்த பாட்டிலின் எண்ணிக்கை 1,400.

இதே போல், எஸ்.இ.டி.சி., ஸ்டாலில், 2,400 பாட்டில்களுக்கு ஆர்டர் கொடுத்திருந்த நிலையில், 240 பாட்டில்கள் மட்டுமே வந்திருந்தது. அவையும், சில நிமிடத்தில் விற்றுத் தீர்ந்தது. மாவட்டம் முழுவதும் 7,000 பாட்டில்கள் எதிர்பார்த்த நிலையில், சில ஆயிரம் பாட்டில்கள் தான் வினியோகம் செய்யப்பட்டது.

சென்னையிலிருந்து பஸ்கள் மூலம், பாட்டில் வினியோகம் நடந்து வருகிறது. அவை மாட்டுத்தாவணி பஸ் ஸ்டாண்டிலிருந்து, மாவட்டத்தின் பிற பகுதிகளுக்கு பிரித்துத் தரப்படும். 24 மணி நேரம் விற்பனை நடக்கும் ஸ்டால்களுக்கு கொண்டு சேர்க்கப்படும்.

'அம்மா மினரல் வாட்டருக்கு' நல்ல வரவேற்பு இருந்தும், போதிய இருப்பு இல்லாததால், முதல்நாளே பயணிகள் ஏமாற்றம் அடைந்தனர். இந்த நிலை, மேலும் சில நாட்களுக்கு தொடரும் எனத்தெரிகிறது.

'செம ஹாட் மச்சி...'

'அம்மா மினரல் வாட்டர்' ஸ்டால்கள், பஸ் ஸ்டாண்டுகளில், அவசரகதியில் தொடங்கப்பட்டுள்ளன. விளக்குகள், மின்விசிறி பொருத்துவது போன்ற பணிகள், நேற்று வரை ஸ்டால்களில் நடந்து கொண்டிருந்தன. 'பிரிட்ஜ்' இல்லாததால், வெதுவெதுப்பான 'வாட்டர்' தான், நேற்று விற்கப்பட்டது. இதை பருகிய சிலர், 'செம ஹாட் மச்சி..' என, கமெண்ட் அடித்தனர். 'பிரிட்ஜ்' உள்ளிட்ட சில உபகரணங்கள் வர தாமதம் ஆகும் என்பதால், இன்னும் சில வாரங்களுக்கு, 'கூலிங் வாட்டர்' கிடைக்க வாய்ப்பில்லை.

இல்லாத விற்பனைக்கு மூன்று பணியாளர்கள்

காலை 6 முதல் மதியம் 2 மணி, மதியம் 2 மணி முதல் இரவு 10 மணி வரை, இரவு 10 மணி முதல் காலை 6 மணி வரை என, மூன்று பிரிவுகளாக, ஸ்டால் ஒன்றுக்கு 3 பேர் வீதம், பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். விபத்துக்கள் மற்றும் உடல்நலம் பாதிக்கப்பட்ட அரசு போக்குவரத்து கழக பணியாளர்களை, விற்பனையாளர்களாக பணிய மர்த்தப்பட்டுள்ளனர்.

நேற்று சில நிமிடங்களிலேயே, பாட்டில்கள் விற்ற நிலையில், காலி ஸ்டால்களில், 'ஷிப்ட்' முறையில், மூன்று பணியாளர்களும் மாறிக்கொண்டிருந்தனர். குறிப்பிட்ட அளவு கிடைக்கும் வரை, இதே நிலை தான் தொடரும்.

மூவரிடம் 11 பவுன் நகை பறிப்பு

மேலூர், செப். 17-

மேலூர் யூனியன் அலுவலகம் எதிரில் கோயில் கும்பாபிஷேகம் நடந்தது. கூட்டத்தை பயன்படுத்தி தெற்குதெரு அம்மாகண்ணுவிடம்,62, இரண்டே முக்கால் பவுன் செயின், மேலூர் கோமதியாபுரம் மூக்கம்மாளிடம்,72, ஐந்து பவுன் செயினை மர்மநபர்கள் பறித்தனர்.

நேற்று முன்தினம் இரவு கஸ்துாரிபாய் நகரில் வீட்டில் துாங்கிக் கொண்டிருந்த ரஹமத் பேகத்தின் கழுத்தில் இருந்த மூன்றரை பவுன் செயினை, ஜன்னல் வழியே மர்மநபர் திருடினார். போலீசார் விசாரிக்கின்றனர்.

சிறுவன் கைது

மதுரை, செப்.17 -

மதுரை கூத்தியார்குண்டைச் சேர்ந்தவர் ஸ்டாலின்தனபால்,50. திருமண நிகழ்ச்சிக்காக, மதுரை பைபாஸ் ரோட்டில் உள்ள மண்டபம் ஒன்றிக்கு வந்த அவரிடம், மேலஅனுப்பானடி ஹவுசிங் போர்டு ஸ்டாலின்,16 பையை திருடினார். அதில், ரூ.20 ஆயிரம், மொபைல் போன், டிஜிட்டல் கேமரா இருந்தது. அவரை எஸ்.எஸ்.காலனி போலீசார் கைது செய்தனர்.

ரூ.27 லட்சம் கொள்ளை

ஊழியர் கைது

மதுரை, செப். 17-

மதுரை தத்தனேரி கொன்னவாயன்சாலையில், பாலமுத்தழகு நிதி நிறுவன அலுவலகம் உள்ளது. செப்.,13 ல், பீரோ உடைக்கப்படாமல், அதில் இருந்த ரூ.27.19 லட்சம் கொள்ளை அடிக்கப்பட்டது.

சந்தேகத்தின்பேரில், ஊழியர்களிடம் விசாரணை நடந்தது. இதில், தேனியைச் சேர்ந்த ராஜா என்பவர், பணத்தை எடுத்தது தெரிந்தது. கடனில் தவித்த ராஜா, பணத்தை கொள்ளையடித்து, கடனை அடைத்ததோடு, புது நகைகளையும் விலைக்கு வாங்கியுள்ளார். மேலும், சில லட்சங்களுக்கு நகை 'ஆர்டரும்' கொடுத்துள்ளார். கைது செய்யப்பட்ட அவரிடம் பணம் மீட்கப்பட்டது.

இன்ஸ்பெக்டர்கள் மாற்றம்

மதுரை, செப்.17 -

மதுரை விளக்குத்துாண் சட்டம் ஒழுங்கு இன்ஸ்பெக்டர் கதிர்வேல், ராமநாதபுரம் சரகத்திற்கு இடமாற்றப்பட்டார். விருதுநகர் மாவட்டத்தில் பணிபுரிந்த இன்ஸ்பெக்டர் பார்த்திபன், மதுரை நகருக்கு இடமாற்றப்பட்டார். தற்போது விளக்குத்துாண் மற்றும் நிலஅபகரிப்பு தடுப்புப் பிரிவு இன்ஸ்பெக்டர்கள் பணியிடங்கள் காலியாக உள்ளன.

காற்று வந்தது களவும் நடந்தது

நாகமலை, செப்.17-

நாகமலைபுதுக்கோட்டை அருகே உள்ள தாராப்பட்டியைச் சேர்ந்த லோகேஷ்வரன் மனைவி மாரியம்மாள்,27.

நேற்று முன்தினம் இரவு, காற்றுக்காக வீட்டின் கதவை திறந்து வைத்து துாங்கினார். வீட்டிற்குள் புகுந்த மர்மநபர், மாரியம்மாள் அணிந்திருந்த ஒன்றரை பவுன் தங்க நகையை பறித்துச் சென்றார்.

இதே ஊரைச் சேர்ந்த செந்தில் மனைவி தீபா,30. இவரும், வீட்டின் கதவை திறந்து வைத்து துாங்க, 3 பவுன் தங்க நகை பறி போனது. போலீசார் விசாரிக்கின்றனர்.

மதுரை வேலம்மாள் மருத்துவமனையில் ஏழைகளுக்கு இலவச மருத்துவ சேவை

தலைவர் முத்துராமலிங்கம் தகவல்

மதுரை, செப். 17 -

''மதுரை துாத்துக்குடி ரோடு, அனுப்பானடியில் உள்ள வேலம்மாள் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில், ஏழைகளுக்கு இலவச சேவை அளிக்கப்படும்,'' என, அதன் தலைவர் முத்துராமலிங்கம் தெரிவித்தார்.

மருத்துவமனை வசதிகள் குறித்து, அவர் கூறியதாவது: 39 ஏக்கர் பரப்பளவில், ரூ.550 கோடி மதிப்பீட்டில், நவீன வசதிகளுடன், இரண்டு ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறது. மருத்துவக் கல்லூரியோடு இணைந்த மருத்துவமனையாக செயல்படும் போது, நோயாளிகள் எண்ணிக்கை அதிகளவில் இருந்தால்தான், மருத்துவ மாணவர்கள் முழுமையாக பயிற்சி பெற முடியும். எனவே, மருத்துவமனையை இரண்டு பகுதிகளாக பிரித்துள்ளோம். ஒருபகுதியில் 900 படுக்கைகளுடன் ஏழைகளுக்கான இலவச சிகிச்சை, இலவச உணவு, இலவச படுக்கை வசதி, மகப்பேறு வசதி அமைக்கப்பட்டுள்ளது. ரூ.3க்கு கீழுள்ள மாத்திரைகள் இலவசமாக தரப்படுகிறது.

இதன் மூலம் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும். நோய்களைப் பற்றி, மாணவர்கள் முழுமையாக தெரிந்து கொண்டு பயில முடியும். தற்போது தினமும் ஆயிரம் வெளிநோயாளிகளும், 200 உள்நோயாளிகளும் சிகிச்சை பெறுகின்றனர். அனைவருக்குமே மருத்துவ ஆலோசனை கட்டணம் இலவசம். மற்றபடி, வசதி வேண்டுவோருக்கு ஆயிரம் படுக்கை வசதிகளுடன், கட்டணத்துடன் கூடிய சிகிச்சை அளிக்கப்படுகிறது.

எக்ஸ்ரே, சி.டி.ஸ்கேன், எலும்பு மூட்டு மாற்று, முதுகு தண்டுவட அறுவை சிகிச்சை அனைத்திற்கும் பாதி கட்டணம். வசதியற்றவர்கள் 40 - 50 பேருக்கு, தினமும் சிறு அறுவை சிகிச்சை கட்டணமின்றி செய்யப்படுகிறது. மதுரை அரசு மருத்துவமனையைப் போல, கட்டணமின்றி செய்யப்படும் சேவையை, பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

தற்போது அவசர சிகிச்சைப் பிரிவு, எலும்புப் பிரிவு, மகப்பேறு, கண், காது, மூக்கு, தொண்டை, குழந்தைகள் நலம், மனநோய் பிரிவுகள் முழுமையாக செயல்படுகின்றன. ரத்தவங்கியும் உள்ளது. இருதய நோய்ப் பிரிவிற்கான பணிகள் நடந்து வருகின்றன.

மருத்துவக் கல்லூரியில், இந்தாண்டில் எம்.பி.பி.எஸ்., படிப்பிற்கு 150 மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். முதல் 'பேட்ச்' முடிந்த பின், முதுநிலை படிப்பு துவங்கப்படும். அடுத்தாண்டு நர்சிங் கல்லூரி துவங்க திட்டமிட்டுள்ளது. விரைவில் பாராமெடிக்கல், பல் மருத்துவக் கல்லூரிகளும் திறக்கப்படும், என்றார்.

டீன் சீனிவாசன், கண்காணிப்பாளர் ராமதாஸ் சடயா, துணை கண்காணிப்பாளர் ரவிராமன் பங்கேற்றனர்.

சிறுமி பலி

திருமங்கலம், செப். 17-

மதுரை விராதனூரைச் சேர்ந்தவர் சண்முகம். இவரது மகள் வினோதினி,5. நேற்றுமுன்தினம் எலியார்பத்தியில் உள்ள பெரியம்மா வீட்டிற்கு சென்றார்.

எதிரில் உள்ள மாமா வீட்டிற்கு செல்வதற்காக மெயின் ரோட்டை இரவு 7.30 மணிக்கு கடந்த போது, அவ்வழியே வந்த கார் மோதியதில் இறந்தார். இதை கண்டித்து, உறவினர்கள் துாத்துக்குடி ரோட்டில் மறியலில் ஈடுபட்டதால், அரைமணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

மதுரை வேலம்மாள் மருத்துவமனை ரத்தவங்கியின் செயல்பாடுகளை, அதன் தலைவர் முத்துராமலிங்கம் விளக்கினார். இடமிருந்து கண்காணிப்பாளர் ராமதாஸ் சடயா, டீன் சீனிவாசன்.

இன்றைய நிகழ்ச்சி

இலவசமாக வெளிவரும் இப்பகுதியில் உங்கள் சங்க அமைப்பு, கோயில், பள்ளி, கல்லூரி, பொது, ஆன்மிக, வர்த்தக நிகழ்ச்சிகளை வெளியிடுகிறோம். உங்கள் நிகழ்ச்சி இடம்பெற இன்றைய நிகழ்ச்சி, தினமலர், மதுரை-625 016 என்ற முகவரிக்கு விபரங்களை அனுப்பலாம்.இ-மெயில்: mdureporting@dinamalar.in

கோயில்

★ பிரதோஷ பூஜை: செல்வ விநாயகர் கோயில், ரயில்வே காலனி, மதுரை, ஏற்பாடு: திருவருள் சபை, மாலை 4.30 மணி.

★ முளைப்பாரித் திருவிழா: மாரியம்மன் கோயில், தல்லாகுளம், மதுரை, கொடியேற்றம், காப்புக்கட்டுதல், காலை 6 மணி முதல்.

★ பிரதோஷம்: கற்பக விநாயகர் கோயில், பூங்காநகர் காலனி, கே.கே.நகர், மதுரை, அபிஷேகம், புறப்பாடு, மாலை 4.30 மணி, சாஸ்தா ஐயப்பன் அபிஷேகம், மாலை 6.30 மணி.

பக்தி சொற்பொழிவு

★ திருமந்திரம்: சக்திவேலம்மாள்நகர், எஸ்.எஸ்.காலனி, மதுரை, பேசுபவர்: நீ.சீ.சுந்தரராமன், ஏற்பாடு: திருவள்ளுவர் மன்றம், மாலை 5 மணி.

★ கந்தரலங்காரம்: வடக்காடிவீதி, மீனாட்சி அம்மன் கோயில், மதுரை, பேசுபவர்: தி.சு.கோவிந்தசாமி, ஏற்பாடு: மதுரை திருவள்ளுவர் கழகம், இரவு 7 மணி.

யோகா, தியானம்

★ ஆழ்நிலை தியான பயிற்சி: சித்தா ஸிரமம், 4, மாரியம்மன் தெப்பக்குளம், மதுரை, நடத்துபவர்: டி.வி. ராஜேந்திரன், ஏற்பாடு: மகரிஷி வேதா விக்யான் பவன், காலை 10 மணி முதல்

★ எளிய முறை உடற்பயிற்சி: அறிவுத்திருக்கோயில், 24, பெசன்ட் ரோடு, சொக்கிக்குளம், மதுரை, உடல்நலம், மனவளம் கலைப்பயிற்சி, காலை 10.30 மணி முதல்.

பொது

★ கருத்தரங்கு: தியாகராஜர் கல்லூரி, தெப்பக்குளம், மதுரை, நூல் அறிமுகம், ஆய்வுக்கட்டுரை, ஏற்பாடு: தமிழ்த்துறை, மதியம் 12.30 மணி.

★ வாரவிழா துவக்கம்: ஒய்.எம்.சி.ஏ., ஹால், நேதாஜிரோடு, மதுரை, கம்ப்யூட்டர் வழங்கும் நிகழ்ச்சி, வழங்குபவர்: கண்ணதாசன் நற்பணி மன்ற தலைவர் சொக்கலிங்கம், ஏற்பாடு: ஜெயன்ட்ஸ் குரூப் ஆப் மதுரை திருநகர், மாலை 6.30 மணி.

★ கருத்தரங்கு: டி.ஆர்.எஸ்., கருத்தரங்க அறை, மதுரை காமராஜ் பல்கலை, பேசுபவர்: நவநீதகிருஷ்ணன், மகேஷ், ஏற்பாடு: பல்சமய ஆய்வு மன்றம், மதியம் 2.30 மணி.

★ ஈ.வெ.ராமசாமி பிறந்தநாள் விழா: நற்பணி மன்ற அலுவலகம், 114/2, டி.பி.கே.,ரோடு, மதுரை, பேசுபவர்: காங்., முன்னாள் பொதுச் செயலாளர் சொக்கலிங்கம், ஏற்பாடு: தியாதீபம் பேரவை, காலை 8.50 மணி.

★ தேசிய கருத்தரங்கு: கே.எல்.என்., பொறியியல் கல்லூரி, பொட்டப்பாளையம், ஏற்பாடு: எலக்ட்ரிக்கல், எலக்ட்ரானிக்ஸ் பிரிவு, காலை 10.30 மணி,

★ பெற்றோர் ஆசிரியர் கூட்டம்: முதுகலை இயற்பியல் துறை, சவுராஷ்டிரா கல்லூரி, மதுரை, தலைமை: முதல்வர் ஆர்.எல்.ராம்நாத், காலை 10 மணி.

★ ஈ.வெ.ராமசாமி பிறந்தநாள் விழா: சிலைக்கு மரியாதை, அவுட் போஸ்ட், மதுரை, ஏற்பாடு: ஜனதா தளம் கட்சி, பங்கேற்பு: மாநில செயலாளர் ஜான்மோசஸ், காலை 10 மணி.

★ இலவச மருத்துவ சிகிச்சை முகாம்: ஜி.வி.மருத்துவமனை, நடராஜ நகர், மதுரை, உடல்பருமன், பித்தப்பை, சிறுநீரக கல், கர்ப்பப்பை கட்டிகளுக்கான முகாம், காலை 8 மணி முதல்.

★ கருத்தரங்கு: கே.எல்.என்., தகவல் தொழில்நுட்ப கல்லூரி, பொட்டப்பாளையம், ஏற்பாடு: சிவில் இன்ஜினியரிங் பிரிவு, காலை 10 மணி.

★ ரத்ததான முகாம்: வேலம்மாள் மருத்துவ கல்லூரி, அனுப்பானடி, ஏற்பாடு: முதல்வர் சுரேஷ்குமார், காலை 10 மணி.

13வது ஆண்டு நினைவஞ்சலி

தெய்வத்திரு.
T.M.அமிர்தம்மாள்
(க/பெ. T.மாரிமுத்து)
மறைவு : 17.9.2000
என்றென்றும் உங்கள் நினைவில் வாழும்
M.நடராஜன், N.சசிரேகா, N.அமிர்தா
குடும்பத்தினர் & ஊழியர்கள்
அமிர்தா டெக்ஸ், மதுரை
R-2013129194

20 ம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம் 23-04-1935
மறைவு 17-09-1993
திரு. M.S. சிவநாத் B.A.,B.L. அவர்கள்
எங்கள் உள்ளங்களில் உறைந்து எங்களை என்றென்றும் நல்வழி நடத்தும் தங்களை அன்புடன் நினைவு கூறும்.
அன்பு மனைவி : திருமதி. நிர்மலா சிவநாத்
மகன் : Dr. கார்த்திக் M.D. - மருமகள் : வினோலா கார்த்திக்
பேரன் : பிரணவ் சித்தார்த்
மற்றும் குடும்பத்தினர், மதுரை-16
R-2013129150

ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி



நாட்டாமங்கலம் பரமேஸ்வரி தியேட்டர் உரிமையாளரும், மதுரை தெற்கு தாலுகா முன்னாள் கிராம நிர்வாக அதிகாரியுமான
நாட்டாமங்கலம் தெய்வத்திரு.
M.P.மணி
B.A., (V.A.O. Retd)
''உங்கள் நினைவில் வாழும்''
அன்பு மனைவி : M.வசந்தா
தலைமை ஆசிரியை (ஓய்வு), சொக்கத்தேவன்பட்டி
மகன்: M.சிவகுமார் M.B.A., - S.ரேகா B.Sc.,
பரமேஸ்வரி ஜூவல்லர்ஸ் & அடகுக்கடை,
மாடக்குளம் & கோச்சடை
பேத்தி : S.மகாலட்சுமி பேரன் : S.கிரிஷ் ராஜ்குமார்
559, திருமலைக்காலனி, மதுரை - 16. ✆ 97877 99922
R-2013129177

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

'' கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம் ''
திரு. D. தங்க சாமி
Retd. Extension Officer (Panchayat)
மனைவி : ஜோதி தங்கசாமி
மகன் : ஸ்டீபன் ஜெபதுரை
மருமகள் : ஜெபஷைனி
பேத்தி : சான்ட்ரா ஷேரன்
பேரன் : சாமுவேல் கிரேக்
தோற்றம் : 10/06/1944
மறைவு : 17/09/2012
1 / 795, ரோஜா தெரு, ஐயப்பா நகர், ஐயர் பங்களா, மதுரை - 625 014.
Ph: 97862 - 81497
2013129182-1-M

HOMAGE

Born on 23-04-1935
Expired on 17-09-1993
SRI M.S. SIVANATH B.A., B.L.,
His achievements` have earned him a place in history,
His simplicity has earned him a place in our hearts.
THE MANAGEMENT AND EMPLOYEES OF
K.R.V.P. OVERSEAS (P) LTD.,
Pandian Printpacks AND TEXTILE MILLS LTD.
SHREEPAKS INDUSTRIES
DELIGHT PRINTPAKS (P) LTD.
TIRUNAGAR, MADURAI - 625 006. Ph : 4387090. Cell : 99944 35350
R-2013129156

இரண்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி

R.சிந்தாமணி
என்றும் நினைவில் வாழும் நீங்காத நினைவுடன்
கணவர் : T.ராசுதேவர்
மகன்கள் : Dr. R.மூர்த்தி M.L.,
(Asst. Prof. அண்ணாமலைபல்கலைக்கழகம்)
T.R.சேகர் (கேபிள் மேக்ஸ் ஓர்த் நகர்)
T.R.கணேசன் M.A., (T.R.G.கேபிள் கீழக்குயில்குடி)
கீழக்குயில்குடி - மதுரை.
R-2013129172